விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 புரட்டாதி 11 ஜுலகஜ் 9 இதழ் 226
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 27—9—82

★ ஜனாதிபதி தேர்தல் பிரசாரம்:

## மைத்திரி - சிறிமாவோ இணைப்புக் குழு நியமனம்!

[கொழும்பு]

ஜனாதிபதி தேர்தலில், திரு. ஹெக்டர் கொப்பேகடுவவை ஆதரித்து தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள, திரு மைத்திரிபால சேனநாயக்கா, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகிய இருவரது தலைமையிலுள்ள இரண்டு அணிகளையும் கொண்ட இணைப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இணைப்புக்குழு, செயற்திட்டமொன்றைத் தயாரித்து, தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. மைத்திரிபால சேனநாயக்கா அணியில் உள்ள திருவாளர்கள் எஸ் கே.கே. சூரியாராச்சி, வி. ரி. வி. கருணாரத்ன, செ. குமாரசூரியர் ஆகியோரும், திருமதி சிறிமாவோ அணியிலுள்ள திரு. டி. பி. இலங்கரத்ன, திரு வை. பி. டி. சில்வா, திரு விஜயகுமாரதுங்க, பேராசிரியர் உடகம ஆகியோரும் மேற்படி இணைப்புக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். [இ]

# ரயில்கொள்ளை: ஒரு பகுதிநகை மீட்கப்பட்டது!

## கல்கமுவ, கணேமுல்ல பகுதிகளில் பொலிஸார் தேடுதல் வேட்டை

### பூர்வாங்க அறிக்கை 'சுந்தரிடம்' கையளிப்பு

(வவனியா)

கொழும்பு-யாழ்ப்பாணம் மெயில் ரயில் கொள்ளை சம்பந்தமாக பொலிஸார் மேற்கொண்ட துரித விசாரணைகளைத் தொடர்ந்து, கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில் ஒரு பகுதி மீட்கப்பட்டுள்ளதுடன், பல புதிய தகவல்களும் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளன.

இதே நேரத்தில்; ரயில் கொள்ளை குறித்து விசாரணை நடத்திய போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் திருமதி வயலற் பெர்ணண்டோ தலைமையிலான குழு; பூர்வாங்க அறிக்கையொன்றைத் தயாரித்து, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்திடம் கையளித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை நிகழ்ந்த ரயில் கொள்ளை குறித்து இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் இப்பொழுது விசாரணை மேற்கொண்டு வருகிறது.

வியாங்கொடை பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த பொலிஸ் குழுவொன்றும் வவனியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் குழுவொன்றும் கூட்டாகச் செயல்பட்டு வருவதுடன்; கல்கமுவ, கணேமுல்ல, வியாங்கொடை ஆகிய பகுதிகளில் கொள்ளையர்களைத்தேடி வலைவிரித்துள்ளது.

வியாங்கொடையில் சில மாதங்களுக்குமுன்னர் ரயிலில் கொள்ளையடித்து, பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுபின்னர் பிணையில் விடப்பட்டவர்களே மேற்படி ரயில்கொள்ளையிலும் சம்பந்தப்பட்டிருக்கலாமென்று பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

### மீட்கப்பட்ட நகைகள்

ரயில் கொள்ளையைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட மூவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டு கிடைக்கப்பெற்றதகவல்களின் பேரில் பல நகைகள் இப்பொழுது மீட்கப்பட்டுள்ளன

(1) பதின்மூன்று கைக்கடிகாரங்கள், 2 ஆயிரத்து ஐநூறு ரூபா, (3) 'இமிரேஷன்' நெக்லஸ், (4) வெள்ளி நெக்லஸ், (5 ஒன்பது தங்கச் சாப்புகள், 6) நான்கு தங்க மோதிரங்கள், (7 ஒரு தாலிக் கொடி, (8) ஒரு 'இமிரேஷன்' தாலிக்கொடி, (9) ஐந்துதங்க ஜிப்ஸி வளையங்கள், (10)மூன்று தங்க காதுக்குச்சுகள், (11) ஐந்து 'இமிரேஷன்' ஜிப்ஸி வளையங்கள், (12) நான்கு 'இமிரேஷன்' காதுக்குச்சுகள் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகளைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் இப்பொழுது முழு வேகத்தில் இயங்கிவருகின்றனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழக பணம்பொருள் நிபுணர் யாழ். விஜயம்

(பண்டத்தரிப்பு)

தமிழ்நாட்டின், பனம்பொருள் ஆராய்ச்சி நிபுணர் திரு. சம்பந்தர் பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் அழைப்பை ஏற்று யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

இவர் இங்கு சுமார் ஒருமாத காலம் தங்கியிருந்து, பனம்பொருள் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைகளை பனம்பொருள் அபிவிருத்திச் சபையினருக்கு வழங்குவாரென்று தெரிவிக்கப்படுகின்றது.

வடபகுதிக் கொள்ளை:

## நீண்டகாலமாகத் தேடப்பட்டவர் கைது!

[யாழ்ப்பாணம்]

வடபகுதி கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாரினால் நீண்டகாலமாக தேடப்பட்டுவந்த வீரபாண்டியன் நந்தகுமார் [26 வயது] என்பவர் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் கைதுசெய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறையில் 56,000 ரூபா நகைக்கொள்ளை, தொண்டமானாற்றில் 40,000 ரூபா நகைக்கொள்ளை, கரவெட்டி 20,000 ரூபா நகைக் கொள்ளை, மாந்தை ப. நோ. கூ. சங்க கொள்ளை, முருகண்டி லொறிக்கொள்ளை, நாச்சிமார்கோவிலடி கொள்ளை ஆகியவை தொடர்பாக பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த நந்தகுமார், இரத்தினபுரி தொகுதியிலுள்ள றக்குவானையைச் சேர்ந்தவர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த எஸ். ஜோர்ஜ். வி. எட்வேர்ட், ரி. நவரத்தினம் ஆகியோர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இக் கொள்ளைகள் தொடர்பாக மேலும் ஆறு பேரை பொலிஸார் தேடுகின்றனர்.

## விஜேசிறி ஐ. தே. க. வில் சேர்ந்தார்

[கொழும்பு]

ஹரிஸ்பத்துவ தொகுதியின் இரண்டாவது எம். பி. திரு. ஆர். பி. விஜேசிறி நேற்று ஐ. தே. கட்சியில் சேர்ந்துகொண்டார்!

இவர் ஐ. தே. கட்சியில் சேருவதற்கான அங்கத்தவர் பத்திரத்தை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் நேற்றுக் கையளித்தார்.

திரு. விஜேசிறி ஐ. தே. கட்சியில் சேருவதற்கு முன்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரி பிரிவில் அங்கம் வகித்து வந்தது தெரிந்ததே.

[இ-வெ]

## சுவீப்முடிவுகள்

[கொழும்பு]

தேசிய லொத்தர் சபை தலைமை அலுவலகத்தில் இழுக்கப்பட்ட 902வது இலக்க சுவீப் முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு

**04 N 0660**

ரூ. 1,00,000,00

2-ம் பரிசு

**19 S 0913**

ரூ: 40 000,00

3-ம் பரிசு

**12 D 0598**

ரூ. 10,000,00

தலா ரூ. 1032-27 சதம்ஆறுதல் பரிசுபெறும் நூறு டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 08 A 0157 | 21 A 0180 |
| 21 A 0395 | 22 A 0440 |
| 25 A 0250 | |
| 01 B 0245 | 06 B 0072 |
| 16 B 0258 | 17 B 0514 |
| 20 B 0296 | |
| 05 C 0101 | 07 C 0566 |

8ம் பக்கம் பார்க்க)

அரிய சந்தர்ப்பம்

★ COMPUTER PROGRAMMING
(Basic–Cobol-Fortran–R P. G II)

★ றேடியோ–டெலிவிசன்–டெக்–மின்சார உபகரணங்கள் திருத்துதல் ஆசிரியர்:–நிதி கொட்டேல்மனேஜ்மன்ற், ரெலக்ஸ் Spoken English, சகல பயிற்சிகளும் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் நடைபெறும் வகுப்பு ஆரம்பம் 29-09-82

விபரங்களிற்கு:-

**The School of Computer Studies**

52/1, கனகரத்தினம் கட்டிடம் மேல்மாடி
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4675)

யாழ். மாவட்டத்தில் ஜனாதிபதி கூட்டங்கள்:

## 'ருத்ரா', 'சுந்தர்' மேற்பார்வையில் பாதுகாப்பு நடவடிக்கை!

யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன வடமாகாணத்தில் கலந்துகொள்ளும் தேர்தல்பிரசாரக்கூட்டங்களில், ஆயுந்தரித்த பொலிசார் சிவில் உடையில் கடமையாற்றவுள்ளனர். இராணுவத்தினர் ரோந்து புரிவர்.

அக்டோபர் 2ம், 3ம் திகதி வடமாகாணத்தில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்ளவிருப்பது தெரிந்ததே.

இரு தினங்களிலும் யாழ். மாவட்டத்தில் பொலிஸ் மா அதிபர் திரு. உருத்திரா ராஜசிங்கம், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஆகியோர் மேற்பார்வையில், வடபிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. டபிள்யு. பி. ராஜகுரு பாதுகாப்பு நடவடிக்கைகளை கவனிப்பார்.

வவனியா - முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைபெறும் கூட்டங்களிலும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு, அ. நவரத்தினத்தின் கண்காணிப்பில் நடைபெறும்.

மன்னார் மாவட்டத்தில் பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. எஸ். எஸ். ஜோசப் கண்காணிப்பில் நடைபெறும்.

[மா]

# வரி விளம்பரம்

## வகுப்பு

உயர் வகுப்பு மாணவர்களுக்கும் உத்தியோகம் பார்ப்பவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் ஆங்கிலம் கற்பிக்கப்படும் எம். குலேந்திரன், கெனடி ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு. 4655

## பயிற்சி

ஒரு மாத எலக்றிக்கல் வயரிங் 27-09-82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4630

## வாடகைக்கு

நாவலர்வீதி கஸ்தூரியார் வீதி சந்தியில் [அப்பையா கடைச்சந்தி] கடைகள் வீடுகள் வாடகைக்குண்டு விபரம்:- 19, கடைச்சாமி வீதி யாழ்ப்பாணம். 4669

## கல்வி

யா/இணுவில் சைவப்பிரகாச அரசினர் மகாவித்தியாலய 1983/84க்குரிய A/L கலை, வர்த்தக வகுப்புகளில் புதிதாக சேர விரும்புவோர்கள் 01-10-82 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பாடசாலைக்கு நேரில் வரவும். - அதிபர். 4643

## பனம் விதை நடுகை - 1982

பயன் பல தரும் பனை மரம் நாட்டும் இயக்கத்தைப் பெருமளவில் மேற்கொள்வதற்குப் பனை அபிவிருத்திச்சபை திட்டமிட்டுள்ளது. வேறு பயிர்களுக்கு உகந்ததல்லாத நிலங்களில் பனை நன்கு வளரக்கூடியது. தற்போது வீட்டுத் தேவைகளுக்காகப் பனை மரம் கூடுதலாக வெட்டப்பட்டு வருவதால் எமது வருங்கால சந்ததியினரின் நன்மைக்காகப் பனம் விதைகளை ஒழுங்கான முறையில் நாட்டிப் பனைமர வளர்ப்பில் ஈடுபடவேண்டியது அவசியம்.

தங்கள் காணிகளில் பெருமளவில் பனம் விதைகளை தாமாகவேநாட்டுவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு மட்டுமன்றி தங்கள் வருங்கால சந்ததிக்கும் வளமான வாழ்வையும் ஈட்டிக்கொடுக்க முடியும்.

இதனை ஊக்குவிக்கும் முகமாக எமது சபை பெருமளவில் பனம் விதைகளைக் கொள்வனவு செய்ய முடிவுசெய்துள்ளது 5000 பனம் விதைகள் ரூபா. 400/-ப் படி கொள்வனவு செய்யப்படும். ஒரே முறையில் 25,000 பனம்விதைகள்வழங்கமுடியுமாயின் விரும்பத்தக்கது. தொடர்புகொள்ளவும்.

**க. நடராசா**
தலைவர்
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
4635

## தேவை

கௌரவமான சைவக் குடும்பத்தைச் சேர்ந்த 12-ல் செவ்வாய் உள்ள பயிற்றப்பட்ட விசேஷ விஞ்ஞான ஆசிரியைக்கு 38 லிருந்து 40 வயது வரையுள்ள பொருத்தமான மணமகன் தேவை. தகுதிக் கேற்றசீதனம் கொடுக்கப்படும். மாற்றுத் திருமணத்திற்கும் வசதி உண்டு ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்க. விளம்பர இல 4672 C/o ஈழநாடு, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம். 4672

பிரபல வியாபார ஸ்தாபனத்திற்கு சுறு சுறுப்பான, உண்மையான கணக்கு அறிவுள்ள, 15 வயதிற்கு மேற்பட்ட விற்பனையாளர் தேவை. ''அ பேரம்பலம் அன் சன்ஸ்'' 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4670

தையல் வேலைக்கு நன்கு அனுபவம் உள்ள பெண்கள் தேவை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் அனுபவம் உள்ளவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும். சம்ரா கமெட்ஸ், 39/9, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 4671

ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் யாழ்ப்பாணம் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் அபிவிருத்திக்கு டல்லாண்டு பணிபுரிய சிறந்த எதிர்காலம். தொடர்பு: வி. வி. எஸ். தெல்லிப்பழை. 4649

## விற்பனைக்கு

நல்லநிலையில் சொந்தப் பாவிப்பிலுள்ள இந்தியன் (பஜாய் ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும் பி. எம். சர்மா, 'துளசி', சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி. 4657

சுன்னாகம் - புத்தூர் வீதியில் நெற்சந்தைப்படுத்தல்சபைக்கு அருகாமையில் தோட்டம் செய்வதற்குரிய 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:சி.சிவஞானம்,காங்கேசன்துறை வீதி, மருதனாமடம், சுன்னாகம். 4662

Akikido Sterio கசெற் டெக்கும் 'Grundig 26' கலர் ரி.வி.யும். உடன் விற்பனைக்குண்டு. P. கனகசபை, 'வடலித் தோட்டம்', மானிப்பாய் வடக்கு. 4658

புனரமைக்கப்பெற்ற C. 90, C. 50, C. 70 மோட்டார் சைக்கிள்களும் DELICA வான்களும் விற்பனைக்குண்டு. மற்றும் எந்தவிதமான வாகனங்களும் குறைந்த விலையில் ஆட்களுக்கு நேரடியாகத் தருவித்துக் கொடுப்போம். நா. சாம்பசிவம் அன் கோ. 54 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 4563

## தவறிவிட்டது

22-9-82 இரவு வீரசிங்கம் மண்டபத்தில் ஹொண்டா மோட்டோர் சைக்கிளின் (185 மொடல்) சறுப்பு நிற பக்க கவர், இன்சூரன்ஸ், லைசென்ஸ் என்பவற்றுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து இ. தயாபரன் 248/4, கே. கே எஸ். ரோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 4663

## விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு பொற்பதி ரோட்டில் 6½ பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு உடன் தொடர்பு கொள்ளவும். அ. வாமதேவன் ''மதுர வாசா'' பொற்பதி ரோட், கொக்குவில் கிழக்கு. 4665

ஊரெழு, நீர்வேலி - கரந்தன் வீதியில் பிரதான இடத்தில் அமைந்துள்ள பதினாறு பரப்புக்காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு பீ. செல்வலிங்கம், 'லிங்க வாசா' உரும்பிராய் வடக்கு உரும்பிராய். 4668

## பின்றுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம், கந்தர்மடம் பலாலி வீதி, 57-ம் இலக்கத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை உமாபதி கைம்பெண் நாகேஸ்வரி என்பவரின் மரணசாதன மில்லாச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. 3623.

உமாபதி கந்தசாமி,
இல.57, பலாலி வீதி,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.
மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1-ம் திகதியன்று முற்பகல் 9 30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982-ம் ஆண்டு புரட்டாதி 6-ந் திகதி நீதிமன்றக்கட்டளைப்படி.

**தா. குலஞானம்**
பதிவாளர்.

வரைவு
இராமலிங்கம்
பாலசுப்பிரமணியம்
சட்டத்தரணி,
52, வைமன்வீதி,
யாழ்ப்பாணம்.
4660

## யானைகள் தொல்லை

(கிளிநொச்சி)

யானைகளின் தொல்லை ஸ்கந்தபுரத்தில் அதிகரித்து வருகிறது.

# தேவை

## காணி விற்பனைத் திட்ட உத்தியோகத்தர்
(LAND SALES PROJECT OFFICER)

காணி விற்பனையில் மிகவும் அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவை

முன் அனுபவவிபரங்களுடன், நற்சாட்சிப்பத்திரங்களையும் இணைத்து இரண்டு சிபார்சாளர்களின் பெயர்களையும் குறிப்பிட்டு விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பங்கள் 01-10-82க்கு முன்னர் கிடைக்கவேண்டும்.

பொதுமுகாமையாளர்,
யாழ். கிளை
**தி பிறௌன்ஸ்கம்பனி லிமிட்,**
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(4673)

# மாபெரும் ஏல விற்பனை

## முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம்

பூதல் வழக்கு இல. ரீ/12

கீழே தரப்பட்டுள்ள பல ரகப்பட்ட பொருட்கள் 1982-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 2-ந் திகதி காலை 9-30 மணி தொடக்கம் என்னுல் பஸ்தியாம்பிள்ளை கராஜ் பீ. டபிள்யூ. டீ. வீதி, முல்லைத்தீவு என்னும் இடத்தில பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

வாங்கப்பட்ட பொருட்களுக்கு உடனடியாகப் பணம் செலுத்தி 2-10-82 பிற்பகல் 4 மணிக்கு முன் பொருட்களை எடுத்துச் செல்லவேண்டும்.

மேற்படி பொருட்கள் யாவும் 2-10-82 காலை 7-30 மணி தொடக்கம் காலை 9-30 மணி வரை பார்வைக்காக பஸ்தியாம்பிள்ளை கராஜ், பீ. டபிள்யூ. டீ. வீதி, முல்லைத்தீவு என்னும் இடத்தில் வைக்கப்படும்.

### பொருட்கள

1. இசுசு லொறி இல. 24 ஸ்ரீ 5177
2. ஒரு பிளாஸ்ரிக் வள்ளம் பதிவு இல. 175/55
3. ஆறு (6) வெற்று டீசல் பரல்கள்
4. லொறி உதிரிப்பாகங்கள்

நீதிமன்றக்கட்டளைப்படி
**சி. கமலேஸ்வரன்,**
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்.
முல்லைத்தீவு.

(4666)

யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகம்,
வேலணை

# பழைய பொருட்கள் ஏலவிற்பனை அறிவித்தல்

மேற்படி விடயம் சார்பானது. கீழே குறிப்பிடப்படும் பொருட்கள் எமது உப அலுவலகத்தில் வைத்து ஏலத்தில் (14-10-1982)-ம் திகதி காலை 10-00 மணியளவில் விற்கப்படும். பொருட்களை ஏலத்தில் வாங்கியவர் உடனடியாக முழுப்பணத்தையும் அலுவலகத்தில் கட்டிப் பற்றுச்சீட்டு எடுத்துக்கொண்ட பின்னரே பொருட்களை எடுக்க அனுமதிக்கப்படுவர். உடனடியாகப் பணம் கட்டத் தவறின் அடுத்த கேள்விக்காரருக்குக் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும் என்பதையும் அறியத்தருகிறேன்.

ஏலம் திருப்திகரமற்றதாக இருப்பின் உடனடியாக ஏலம் போடுவதை நிறுத்தி வைக்கவும் உரிமையுண்டு என்பதையும் அறியத்தருகிறேன்.

1. பனைமர கைமரங்கள் (5'-7' வரை)......50.
2. பனைமர சிலாகைகள்........................18.
3. தீராந்தி மரங்கள் 8 மரங்கள்...............90அடி
4. சட்டத்துடன் கதவு 8' 0' 7'-0'.........01
5. சட்டத்துடன் கதவுகள் 6' 0' 7'-0'......02
6. சட்டத்துடன் கதவு 3'-0' 7'-0'.........01
7. கம்பியுடன் யன்னல்சட்டம் 31/2'41/2'...01
8. உடைந்த கதவுப் பலகைகள்...............12
9. பழைய கேற்..................................03
10. பழுதாகிய சிமெந்துடன்பக்கெற்றுகள்...58
11. 1/2'' இரும்புக் கம்பி 19 அடியல்.........03
12. 1/4'' இரும்புக் கம்பி 75 அடியில்.........01
13. பழைய புதினப் பத்திரிகை..............100இரு.

**நா. மணிவாசகம்பிள்ளை,**
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,

**யா. அ. ச. உப அலுவலகம்,**
வேலணை.

திகதி: 24-9-82. (4661)

ஒட்டோஸ் லிமிட்டெட்

## ரயர் விற்பனை

சகல வாகனங்களுக்கும் (ஸ்கூட்டர் உட்பட) தேவையான ரயர், ரியூப்புகள் கைவசம் விற்பனைக்கு உண்டு. உங்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளவும்.

**ஒட்டோஸ் லிமிட்டெட்,**
190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22496
(4636)

# இத்தாலிய விமானக் கடத்தல் நாடகம்

# தோல்வியில் முடிந்தது!

## 109 பயணிகளும் மீட்பு; கடத்தல் காரர் கைது!

லண்டன், செப். 26

அல்ஜியர்ஸிலிருந்து ரோம் நகரைநோக்கிச்சென்றுகொண்டிருந்த விமானம் மத்திய தரைக்கடல் மீதாகப் பறந்து கொண்டிருந்த போது கடத்தல்காரரால் திசைதிருப்பப்பட்டு சிசிலித்தீவில் இறக்கப்பட்ட சில மணிநேரத்துக்குள்ளாகவே இக்கடத்தல்நாடகம் தோல்வியில் முடிந்தது.

இக்கடத்தல் நாடகத்தில் பணயமாக வைக்கப்பட்டிருந்த விமானத்திலிருந்த அனைவரும் பாதுகாப்பாக விடுதலை செய்யப்பட்டனர்!

அல்ஜியர்ஸ் விமான நிலையத்திலிருந்து ரோம் நகரை நோக்கிச். சென்று கொண்டிருந்த போயிங் பயணிகள் விமானமொன்றே இக்கடத்தல் நாடகத்துக்குள்ளானது. இந்த விமானம் இத்தாலியின் 'அலிடாலியா' விமானச் சேவையினருக்குச் சொந்தமானதாகும்

இந்த விமானம்மேலெழுந்த 20 நிமிடங்களில் மத்திய தரைக்கடலின் மீதாகப்பறந்து கொண்டிருந்த போது பணய நாடகம்ஆரம்பித்தது லிபியா, மொல்டோவா ஆகிய நாடுகளில் விமானத்தை இறக்க கடத்தல்காரர்கள் அனுமதி கோரினர். ஆயினும் இநநாடுகள் இதற்கு மறுத்துவிட்டதைத் தொடர்ந்து இததாலிக்குச் சொந்தமானசிசிலித்தீவில் விமானம் இறக்கப்பட்டது.

இங்குவிமானத்திலிருந்த109 பயணிகளும் விடுதலை செய்யப்பட்டு பிரதம விமானியும், உப விமானியும் மட்டுமே தொடர்ந்தும் பணயமாக வைக்கப்பட்டிருந்தனர்.

மூன்று மணித்தியாலங்கள் மட்டுமே இவ்வாறு விமானிகளைக் கடத்தல்காரர் பணயமாக வைத்திருக்க முடிந்தது. பின்னர் இத்தாலிய பொலிசாரின் நடவடிக்கையொன்றை அடுத்து கடத்தல்காரர்கள் கைதாகியதுடன்விமானிகளும் விடுவிக்கப்பட்டனர்.

விடுதலையான பணக் கைதிகள் எதுவித துன்புறுத்தல்களுக்கும் உட்படவில்லை என்றும, விமானமும் நல்ல நிலையில் இருப்பதாகவும் செய்திகள் தெரிவித்தன. [கி]

## ஆசிய நாடுகளின் இராணுவ செலவினம் அதிகரிக்கின்றது

டோக்கியோ. செப். 26

ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் உள்ள அமெரிக்க நேச நாடுகள் ஆயுதப் போட்டியில் மேன்மேலும் ஈடுபட்டு வருகின்றன'' என்று வி. ஷூரின் என்ற பத்திரிகையாளர் எழுதுகிறார். இதற்காக அவர் சில நாடுகளை உதாரணம் காட்டியுள்ளார்.

''ஜப்பான் தனது 1982ம் ஆண்டிற்கான ராணுவச் செலவினங்களுக்காக 1981ஐக் காட்டிலும் 7சத வீதம் அதிகமான தொகையை ஒதுக்கியுள்ளது, 1982/83ம் நடப்பாண்டிற்கான ராணுவச் செலவுக்காக இந்தோனேஷியா 100 கோடி டாலர்களை ஒதுக்கியுள்ளது. சின்னஞ்சிறிய நாடான சிங்கப்பூரில் 50 000 பேர் பாதுகாப்புப்படையில் உள்ளனர் அதே வேளையில் ஆசியாவில் ராணுவமயமாகிவரும் நாடுகளில் பாகிஸ்தான் முதலிடத்தை வகிக்கிறது. 1970ம் ஆண்டின் பிற்பகுதியில் • பாகிஸ்தான் தனது மொத்த பட்ஜட்டின் ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்கை ராணுவத்துறைக்கு செலவுசெய்தது. அதேவேளையில் தேசிய பட்ஜட்டிலிருந்து 1.5 சத வீதத்தையே பொது சுகாதாரத்துறைக்காகச்செலவு செய்தது.

''ஆசிய நாடுகள் ராணுவத் துறைக்கென ஒதுக்கியுள்ள அதிகப்படியான நிதியை சரியான வழியில் பயன்படுத்துமாயின் தம் நாடுகளிலுள்ள வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், கல்வியறிவின்மை, சுகாதாரச் சீர்கேடுகள், நோய் ஆகியவற்றை ஒழித்துக்கட்டிவிட முடியும்''என்றும் ஷூரின் குறிப்பிடுகின்றார்.

ஆயுதப்போட்டியின் காரணமாக இந்த ஆசிய நாடுகள், தாம் அரும்பாடுபட்டுச் சம்பாதிக்கும் அந்நியச் செலாவணியை வீண் விரயம் செய்கின்றன. ஒருமுறை ஆயுதப் போட்டிப் பாதையில் ஒருநாடு கால் வைத்து விடுமானால், அதனைச்சுற்றி ஒருவிஷவட்டம் உருவாகிவிடும். இந்நிலையே இன்று இந்த ஆசியநாடுகளுக்கேற்பட்டுள்ளது என்றும்இந்த பத்திரிகையாளர் சுட்டிக்காட்டுகிறார்.

## ஐ. நா. படை அதிகாரிகள் நால்வர்கண்ணிவெடிக்குபலி

பெய்ரூட், செப். 26

கிழக்கு பெய்ரூட்டில் ஜீப் வண்டியொன்றில் சென்று கொண்டிருந்த ஐ நா. பாதுகாப்புப் படையின் நான்கு அதிகாரிகள் வீதியிலிருந்த கண்ணிவெடிக்கு பலியானார்கள்.

இந்த அதிகாரிகளில் இருவர் அமெரிக்க இராணுவ மேஜர்களென்று அறிவிக்கப்பட்டது

இக்கண்ணிவெடி வைப்புக்குப் பொறுப்பானவர்கள் யாரென்பது பற்றிய விபரம் எதுவும் உடனடியாக அறியப்படவில்லை.

இதுஇவ்வாறிருக்க, மேற்கு பெய்ரூட் வந்துள்ள பிரெஞ்சு, அமெரிக்கப்படைகள் தமது கடமைகள் என்னவென்பது குறித்தும் எப்பகுதிகளில் தாம் கடமையாற்ற வேண்டுமென்பது குறித்தும் தெளிவான அறிவிப்புகள் கிடைக்கவில்லையென்று கூறியுள்ளன.

மேற்கு பெய்ரூட் வந்திறங்கிய பிரெஞ்சுத் துருப்புகள் துறைமுகத்தின் சகல இடங்களிலும் இஸ்ரேலியப் படைகள் காணப்பட்டனவென்றும், இந்நிலையில் தாம் செய்ய வேண்டிய கடமைகள் குறித்து எதுவும் புரியாதநிலையிலிருந்ததாகவும் தெரிவித்தனர். ஐ. நா. சமாதானப் படையில் அங்கம்வகிக்கும் பிரெஞ்சுத் துருப்புகள் போதிய தெளிவானஅறிவிப்புக்கள் மேலிடத்திலிருந்தும் கிடைக்காததனால் தமது ரோந்துச்சேவைகளை விஸ்தரிக்காது மேற்கு பெய்ரூட்டிலுள்ள பிரெஞ்சுத் தூதரகத்தில் இருந்துவருகின்றன.

அமெரிக்கா, இத்தாலி ஆகிய நாடுகள் ஐ. நா. பாதுகாப்புச் சேவைக்கு தாம் மேலும் அனுப்பிவைக்கவிருந்த துருப்புக்களை பெய்ரூட்செல்ல அனுமதிப்பதில் மேற்குறிப்பிட்ட காரணங்களால் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளனரென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## ஸெயில் சிங் அமெரிக்கா செல்வார்

புதுடில்லி, செப். 26

இந்திய ஜனாதிபதி திரு. ஸெயில் சிங் வைத்திய பரிசோதனையின் பொருட்டு இம்மாதம் 30-ம் திகதி அமெரிக்கா செல்லவுள்ளார். [வெ]

## இந்திராவுக்கு டாக்டர் பட்டம்

மாஸ்கோ, செப். 26

சோவியத் யூனியனில் தற்போது விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்திக்கு சோவியத்தின் கீத் பல்கலைக்கழகம் இன்று டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கவுள்ளது. [வெ]

## டிரக் புரண்டு 3 பேர் பலி

### 7 பேர் படுகாயம்

சென்னை, செப் 26

'எமிரால்ட்' என்று அழைக்கப்படும். பள்ளத் தாக்கில் டிரக் வண்டியொன்று குடைசாய்ந்ததால் 3 பேர் பலியாகினர். ஏழுபேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த டிரக்வண்டியில் தொழிற்சாலை யொன்றுக்குச் சொந்தமான பொருட்கள் திருடப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (கி)

## சேர்ச்சிலின் மகள் காலமானர்

லண்டன், செப். 26

பிரிட்டனின் முன்னுள் பிரதமமந்திரி வின்சன்ட் சேர்ச்சிலின் மகள், நேற்று லண்டனில் காலமானுர். இவர் ஒரு நடிகையாவர். இறக்கும்போது அவருக்கு 67 வயதாகும்.

## பெய்ரூட் படுகொலை கண்டனம்செய்யக் கோரிக்கை

லண்டன், செப். 26

கடந்த வாரம் பெய்ரூட்டில் இடம்பெற்ற படுகொலையை கண்டனம் செய்யவேண்டுமென்று இந்தியாவும் மற்றும் அணிசேரா நாடுகளும் ஐ. நா. பாதுகாப்புச் சபையைக் கோரியுள்ளன. [வெ]

## "அக்டோபர் புரட்சியுடன் எனக்கும் தொடர்புண்டு!"

### -- பிரதமர் இந்திரா

புதுடில்லி, செப். 26

''அக்டோபர் மாதத்திலேயே நான் பிறந்ததால் சோவியத்தின் அக்டோபர் புரட்சியுடன் எனக்கும் தொடர்பிருப்பதாகக் கருதுகிறேன்.'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமக்கு உக்கிரேயின் குடியரசின் சுப்றீம் சோவியத் சபை வழங்கிய விருந்துபசாரத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திருமதி காந்தி மேலும்அங்கு பேசுகையில்சோவியத்–இந்திய உறவு பொது இலட்சியங்களின் அடிப்படையில் அமைந்ததென்றும், இந்தியாவின் விஞ்ஞான பொருளாதார மலர்ச்சிக்கு சோவியத் அதிக பங்காற்றியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

பிரதமர் திருமதி காந்தி தமது உத்தியோகபூர்வ சோவியத் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றுக் காலை தாயகம் திரும்பினுர்.

இந்திய கம்யூனிட்கட்சி பிரதமர் இந்திராகாந்தியின் இந்த சோவியத்விஜய நோக்கத்தினைப் பாராட்டியுள்ளது. இதன் செயலாளர் இதுபற்றிக் குறிப்பிடுகையில் இவ்விஜயம் இந்திய–சோவியத் நட்பு மேலும் வலுவடைய வழிவகுக்குமென்றும், இந்தநட்பு ஆசியாவின் அமைதிக்கு மட்டுமல்லாது முழு உலக அமைதிக்கும் ஏதுவாக இருக்குமென்றும் தெரிவித்தார். (கி)

## 28-ம் திகதியே விடுமுறை

'யாழ்ப்பாணம்)

ஹஜ்ஜு பெருநாளுக்காக இம்மாதம் 28-ம் திகதி பாடசாலைகளுக்கு விடுமுறைதினமாகும் முன்பு 29-ம் திகதி என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இப்பொழுது 28-ம் திகதியை சுற்றுநிருபம்மூலம் சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாண்டியர்கால கல்வெட்டு விருதுநகரில் கண்டுபிடிப்பு

சென்னை, செப். 26

விருதுநகருக்கு அண்மையிலுள்ள செங்குந்தபுரம் என்னுமிடத்தில் பாண்டியர்கால கல்வெட்டுக்கள் இரண்டும், தூண்கள் இரண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்பொருள் அகழ்வாராய்ச்சிப் பிரிவினரே இவற்றை செங்குந்த புரத்திலுள்ள சிவன் ஆலயமொன்றிலிருந்தும் வைணவ ஆலயமொன்றிலிருந்தும் கண்டுபிடித்துள்ளனர்.

இக்கண்டுபிடிப்புகளுக்குப் பொறுப்பாகவிருந்த மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் ''இப்பாண்டியர்காலக் கல்வெட்டுக்கள் 13ம் நூற்றுண்டில் கேரளத்துடன் தமிழநாடு கொண்டிருந்த தொடர்பைக்காட்டுகின்றன வென்றும். இவற்றில் ஒன்றில் பாண்டியமன்னனை மாறவர்மன் சுந்தரபாண்டியனின் நெருங்கிய உறவினர் ஒருவர் கேரளத்தவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

செங்குந்த புரத்திலேயே கிணறொன்றுக்கருகில் கண்டுபிடிக்கபட்ட தூண்கள் இரண்டில் முனியாண்டி, வைரவர் ஆகிய தேவர்களின் உருவங்கள் காணப்பட்டனவென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## பிரதமர் பெகினுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டம்

ரெல்அவில், செப். 26

இஸ்ரேலில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று மே. பெய்ரூட் படுகொலை குறித்து ரெல் அவில் நகரில் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது இதில் இலட்சக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். இது வரை இஸ்ரேலில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் இதுவே மிகப்பெரியதென்று விபரிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டோர் பிரதமர் பெகினுக்கு எதிரான கோஷங்களையும், இஸ்ரேலிய ஆளுங் கட்சிக்கு எதிரான கோஷங்களையும் எழுப்பினர். பலர் தமது கைகளில் ஒலிபெருக்கிக் கருவிகளை வைத்துக்கொண்டு எதிர்ப்புக் கோஷங்களைப் பலமாக எழுப்பினர். பதாகைகளும், சுலோகஅட்டைகளும்பெருமளவில்கொண்டுசெல்லப்பட்டன.

இஸ்ரேலின் பிரதான எதிர்க்கட்சியான தொழில் கட்சியும் வேறும் சில எதிர்க்கட்சிகளுமே இம்மாபெரும் ஆர்ப்பாட்டத்தை ஒழுங்குசெய்திருந்தன. பிரதமர் பெகினை இராஜினுமாச் செய்யுப் கோஷமே இந்த ஆர்ப்பாட்டத்தில் முக்கியம் பெற்றிருந்தது. [கி]

## மணிவாக்கு

கட்டுக்கடங்காவென்னுளமுங்
காதலாகிச் சேய்மைக்கட்
காணு'' பொருளைப் பெறவெண்ணிக்
கருதிச்செல்லுமியல்பினதே.

— ரவீந்திரநாத்தாகூர்
விபுலாநந்த அடிகளின் மொழிபெயர்ப்பு

# நமது நோக்கு

## எழுச்சி விழா

வான் பொய்த்திருக்கும் யாழ்ப்பாணத்துக்கு மழை கொட்டும் முகிலாக வந்திருக்கிறார் அண்ணாமலைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். வி. சிட்டிபாபு அவர்கள்.

யாழ். பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா அண்ணாமலை துணைவேந்தரின் பேருரையால் ஒரு எழுச்சி விழாவானது பெரிதும விரும்பத்தக்கது; பெரும் பாராட்டுக்குரியது.

யாழ்ப்பாணத்தின் 'சிறமை' இங்கு வதியும் மக்களுக்குத் தாங்க முடியாத துன்பத்தை ஏற்படுத்திவரும் இவ்வேளையில், அதன் பெருமையை நினைவூட்டவந்த பேராசிரியர் சிட்டிபாபுவுக்கு எங்கள் மக்கள் என்றும் நன்றியுடையவராக இருக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

'சிறுமை' யென்று நாம் குறிப்பிடும்போது யாழ்ப்பாண மரபுக்கு பெருமதித்தளித்த பேராசிரியரின் புகழுரைக்கு மாறுபட்ட கருத்தில் எதனையும் குறிப்பிடவில்லை.

அரசியல்தாக்கத்தால், வாழ்க்கைக்கே பாதுகாப்பு இன்றி அல்லற்படும் நிலையில் பொதுமக்கள் வாழும் நிர்ப்பந்தம் இன்று நீண்டு கொண்டுபோகின்றது. இது உலகறிந்த விடயம்.

தமிழ் மக்களின் சிறந்த நலன்களைப் பிரதிபலிக்கும் வகையில் வாழும் இந்நகர் மக்கள் தம் முன்னோர் விட்டுச்சென்ற பெருவாழ்வின் லட்சியங்களுக்கமையவாழும் சுதந்திர மற்றுத் தவிக்கின்றனர். தமக்குரிய உரிமைகளை இழந்து தளர்ந்த நிலையில் இருக்கும் சிறுமையையே நாம் கருதுகிறோம்.

இந்த நிலையில் தமிழ் இளைஞர் மெலிவுற்று, நலிவுற்று, தம்திறமைகளுக்கேற்றகல்விதொழில்வாய்ப்பற்று அரசியல் பாகுபாட்டுக்குப் பலியாகின்றனர். அதன் விளைவு பல அனர்த்தங்களை வருவித்திருக்கிறது.

பேராசிரியர் உணர்ச்சிததும்பக் குறிப்பிட்ட யாழ்ப்பாணத்தின் கடந்த காலப் பெருமையோ இந்த தாழ்வு நிலைமைக்கு மறைமுககாரணம் என்று அஞ்சுமளவிற்கு மக்கள் மனவுடைவு அதிகரித்து வருகிறது

இந்த இருள்பரந்தபின்னணியில் அண்ணாமலை துணைவேந்தரின் பேருரை ஒருபேரொளியெனக் கருதலாம்.

பொருத்தமான இடத்தில் பொருத்தமான நேரத்தில் பொருத்தமான அறிஞர் பொருத்தமான உரை வழங்கியிருப்பது யாழ்ப்பாண மக்களின் நல்லதிர்ஷ்டமாகும்.

சுவாமி விபுலாநந்தரின் அளப்பரிய தமிழ்த்தொண்டு, தமிழகத்தையும் யாழ்ப்பாணத்தையும், சைவத்துக்கும் தமிழுக்கும் புரிந்த தொண்டால் பிணைத்துவைத்த ஆறுமுக நாவலரின் வீரத்தொண்டு, இலங்கை அரசியலில் பெருந்திருப்பம் ஏற்படுத்திய சேர் பொன்னம்பலம் சகோதரர்களின் அரசியல் ஞானம், அனைத்துலகையும் மெச்சவைத்த கலாயோகி ஆனந்த குமாரசாமியின் ஆராய்ச்சித்தொண்டு — இவையெல்லாம் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, பாரதத்தையும்இலங்கையையும் பிணைக்கும் அற்புதச் செயல்கள்: மறைக்கமுடியாததொடர்புகள்.

இன்றைய வளர்ந்தோர் இதனை மறந்தும். இன்றைய இளைஞர் இதனை அறியாத நிலையில் பொருட்படுத்தாமலும், அரசியல்வாதிகள் தத்தம் மதங்களுக்கொவ்வாத வகையில் இதனை மறைத்தும் வருகின்ற இக்காலத்தில் இதற்குப் புத்துயிர் கொடுக்கும் பாங்கில் பேராசிரியர் ஒரு கலாசார தூதுவராக எங்கள் மத்தியில் வந்திருப்பதை இப்பகுதி மக்கள் மட்டுமல்ல, நாட்டின் நலனைக்கருதும் எல்லா மக்களும் பெரும்பேருகக் கருதவேண்டும்.

இதற்கு உவந்த சூழ்நிலையை உருவாக்குவதன் முக்கிய பொறுப்பு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்குரித்தென்பது சொல்லாமலே விளங்கும்.

இருப்பினும் அந்த உண்மையை ஆழமான கல்விக் கருத்தால் தமது பேருரையில் விளக்கியிருக்கிறார் பேராசிரியர் அவர்கள்.

தொழில் வளங்காணுத யாழ்ப்பாணத்தில், யாழ். பல்கலைக்கழகமென்றொரு பெருந் தொழிற்சாலையிருப்பதாக நாட்டுமக்கள் குறிப்பாக தென்னிலங்கை மக்கள் கருதுகின்றனர். மூடநம்பிக்கை கலந்த பண்டைக் கருத்து இது; எமது மக்கள் இலகுவில் இவ்வித புளுகுக் கெடுபடுவார்களெனக் கருதியும் இக்கருத்து அரசியல் வாதிகளாலும் வகுப்புவாதிகளாலும் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

இன்று யாழ்ப்பாணத்தின் கல்வி நிலைசேலிக்குரியளவில் குன்றிவருவது கண்கூடு; அன்று இங்குள்ள சிரேட்ட பாடசாலைகளிலிருந்து வெளியேறும் திறமைசாலிகளுக்கே ஒரு பல்கலைக்கழகம அவசியதேவையென்று சுவாமி விபுலாநந்தர் போன்ற பெரியோர் குரலெழுப்பி, அது காணுது மறைந்து விட்டனர்.

இன்றைய நிலையை நாம் இங்கு விபரிக்கவேண்டிய தேவையில்லை. எனவே இப்பகுதியில், இவ்வளவு காலம் கடந்த நிலையில் உருவாக்கப்பட்டுவரும் உயர் கல்வி நிலையம் பிள்ளையாரெனப் பிடிக்கப்பட்டது. மாமலராளின் நோக்குஉண்டாக வேண்டியது.

அது பட்டதாரிகளை உருவாக்கும் தொழிற்சாலையானுல் அது பெருச்சாளி என்பதில் ஐயமில்லை; அந்த அச்சம் இன்று இல்லாமலில்லை; அதனைக்கருத்திற்கொண்டு தீர்க்கதரிசனத்துடன் பேராசிரியர் விடுத்த பெரும் எச்சரிக்கை பல்கலைக்கழகத்துடன் தொடர்புபுடைய எல்லோருக்கும் ஒரு அரிய படிப்பினையாக வேண்டும்.

விவசாயம், தொழில் சுகாதாரம் போன்ற அடிப்படை அபிவிருத்தி ஆக்கங்களுக்கு சமுதாயத்தின் பழமை, புதுமை இரண்டையும் இணைக்கவல்ல பெருஞ் சக்தியாக வளரவேண்டுமென்பதை துணைவேந்தரின் பேருரை திடமாக வற்புறுத்துகின்றது.

## யாழ்ப்பாணத்துத் திருப்பதியான்

# இன்று தேரில் திருப்பவனி

தமிழ் நாட்டின் வட எல்லையாக விளங்கித் தற்போது ஆந்திர மாநிலத்தில் அமைந்துள்ள திருப்பதியில் எழுந்தருளியிருந்து அருள் புரியும் வெங்கடேஸ்வரர் யாழ்ப்பாண மக்களுக்காக எழுந்தருளியுள்ள இடம் வண்ணை வெங்கடேஸ்வரர் ஆலயம் என்பர்.

நகர மத்தியில் திருமகள் பார்பனாய், திருவுக்கும் திருவாகிய தேவனின்–திருமாலின் ஆலயம் அமையவேண்டும் என்ற கருத்துக்கு ஏற்ப அமைந்துள்ள இவ்வாலயத்தில், தேர்த்திருவிழாவை முதன்மையாகக் கொண்டு நடைபெறும் பெருந்திருவிழாக்கள் மட்டுமன்றி வரலட்சுமி விரதம், திருவிளக்குப்பூசை, ஸ்ரீராமநவமி, கிருஷ்ண ஜயந்தி முதலிய தினங்களும் வெகு விமரிசையாக நடைபெறுகின்றன.

சில ஆண்டுகளாக வழிபாட்டுக்குச் செல்வோரின் கண்ணையும் கருத்தையும் கவரும் பாங்கில் நிறைவுற்ற கோபுரம், பிரகாரம், தேர் முதலியன விளங்குகின்றன

மச்சாவதாரத்தால் வேதங்களை மீட்டும் கூர்மாவதாரத்தால் தேவர்க்கு அமிர்தம் வழங்கியும், வராக அவதாரத்தால் பூமிக்கு அசுரரால் ஏற்பட்ட அவதியைப் போக்கியும், நரசிம்மாவதாரத்தால் சிஷ்ட பரிபாலன துட்டநிக்கிரக இயல்பை வெளிப்படுத்தியும், இராமாவதாரத்தால் தனது எளிமைப் பண்பையும், கிருஷ்ணவதாரத்தால் தனது தெய்வீக ஆற்றலையும் வெளிப்படுத்தி திருவிளையாடல்கள் பல புரிந்த நாராயணன் ஆலயங்களிலுள்ள பல உருவத் திருமேனிகளைத்தனது அர்ச்சாவதாரமாக ஏற்று அடியார்களின் வழிபாடுகளுக்கு அருள் புரிகின்றான் என்பது வைணவக் கொள்கையாகும்.

இக்கொள்கைக்கு ஏற்ப எமது வழிபாடுகளை ஏற்று எமக்கு அருள இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கின்றவரும், தன்னுடைய நாமங்களை வாயினால் பாடி மனத்தினால் சிந்திப்பவர்களின் பழைய, புதிய வினைகளைத் தீயிட்ட தூசு போல அழிக்கின்றவரும், கருமுகில் தாமரைக்காடு பூத்தது போன்ற அருட்திருமேனியில் சங்கு சக்கரங்காளயன்றி திருமறுவும் விளங்க எளிதில் நினைக்கும்படியான தியான உருவத்தை உடையவரும் 'தேவர்கள் தேவன்' என்று தேவர்களாலும், 'புருஷ உத்தமன்' என்று மனிதர்களும் வணங்க அருள் செய்பவரும், கலியுகக்கண்ணன் என்று போற்ற கலிகாலத்தில் விசேஷமாக அருள்பவருமான வண்ணை வெங்கடேஸ்வரரைத் திருத்தேரில் துதித்து வணங்கி நாம் அருள் பெறுவதற்காகவே இன்று தேரில் வரதராஜன் வருகின்றான். அவனை வணங்கி அவனருள் பெறுவோம்.

— அருளாளன்

# மக்கள் கருத்து

## மரம்நடுவோம்

ஆங்கிலேயர் 1985 ஆம் ஆண்டில் கண்டிப் பிரதேசங்களைக் கைப்பற்றியதும், கொழும்பில் இருந்து கண்டிக்குப்போகும் நெடுஞ்சாலை ஓரங்களில் நிழல் மரங்களை நிரை நிரையாக நாட்டினார்கள். இலங்கையில் முன்னர் காண முடியாத புதுவிதமான பலவின மரங்களை அவர்கள் நாட்டி அலங்கரித்து அழகுபடுத்தினார்கள். அம்மரங்கள் நிரந்தரமாக நிழல் கொடுத்ததோடு பருவ காலங்களில் அழகாகப் பூத்துக் குலுங்கின. அவையாவும் காலகதியில் அடர்ந்து அகலித்துப் பரந்து கிளையெறிந்து பகலவனை மறைத்து நின்றன. இவ்வாறாக, அண்மையில் இலங்கையை நோக்கி வந்த பெரும் புயல்களும் இங்கே உண்டான வெள்ளம்பெருக்கும் பல மரங்களை வேரோடு சாய்த்தன.

இதுதான் அதிர்ஷ்டம், பெருவருமானம் எனக் கருதிய அகாரிகள் அம்மரங்களைப் பல்லாயிரம் ரூபாவுக்குப் பகிரங்க ஏலத்தில் விற்று வருவாய் தேடிக் கொண்டார்கள். ஆனால் அந்த அந்த இடங்களில் ஏதாவது ஒரு மரமாவது நடுவதற்கு இரங்கவும் இல்லை, எண்ணவும் இல்லை. 'நிழலிலே நின்றுபோ' என்று யாரும் எவரும் யாருக்கும் சொல்லத் சொல்லத்தேவையில்லை. அதே போல் 'அதிக மரம் நடுக என்றும் எவரும் யாருக்கும் சொல்லத் தேவையில்லை. அதிகாரிகள் மனமிரங்கி நெடுஞ்சாலை ஓரங்களில் நிழல் மரங்களை நடுவார்களாக, மரக்கன்றுகள் கிடையா என்று சோம்பல் கொள்ளாமல் மில்க்வைற் தொழிலதிபரிடம் கேட்டு வேண்டிய மரங்களைப் பெற்றுக் கொள்வாராக.

'மில்வைற்செய்தி'

## கைதடி வயோதிபர் இல்லத்தில் நாளை

# சிரமதானமும் கதம்ப நிகழ்ச்சியும்

[அரியாலை]

கைதடி வயோதிபர் இல்லத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி இன்ரறக்ற் கழகத்தின் ஆதரவில் சர்வதேச வயோதிபர் ஆண்டினை முன்னிட்டு நாளை காலை செவ்வாய்க்கிழமை சிரமதானம், பல்சுவை நிகழ்ச்சி ஆகியன நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவும் அவரது பாரியாரும் கலந்துகொள்கின்றனர்.

காலை 8–30 மணிக்கு சிரமதானம் நடைபெற்று வர்ணம் பூசுதல், தென்னங் கன்றுகள், நிழல் தரும் மரங்கள் நாட்டல் ஆகியன இடம் பெறும். தேநீர் விருந்தும் வயோதிபர்களுடன் அளவளாவுதலும் பிற்பகல் இடம் பெறும்.

தொடர்ந்து பிற்பகல் வயோதிபர் இல்லத்தில் விசேஷமாக அமைககப்படும் திறந்தவெளி அரங்கில் பல்சுவை நிகழ்ச்சிகள் இன்ரறக்ற் கழகத்தினரால் நடாத்தப்படும்.

சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் சங்கீதபூஷணம் ஏ. வி. சிவஞானசேகரத்தின் இன்னிசைக் கச்சேரி முதலில் நடைபெறும்.

மாணவர்கள் தயாரித்தளிக்கும் வாத்தியவிருந்து நிகழ்ச்சியில் புல்லாங்குழல் எம். தயாபரனும், மிருதங்கம் வி. இராதாகிருஷ்ணனும், தபேலா ஆர். இரகு நந்தனும் கடம் வி.சிவானுஷந்தனும், டோலக் கே. ஜெயக்குமாரும் அளிப்பார்கள்.

செல்வன் க. இரமணனின் பரதநாட்டியம் சிறப்பு நிகழ்ச்சியாக அமையும்.

இன்ரறக் கழக மெல்லிசைக் குழுவினர் மெல்லிசை விருந்தளிப்பர் செல்வன்கள் வை. யாதவன், கு. சயந்தன, கே. பறிங்ரன், ஆர். பிரேரூபன் ஆகியோருடன் வயோதிபர் இல்லத்தைச் சேர்ந்தவர்களும் மெல்லிசைப்பாடல்களைப் பாடுவர்.

## நல்லூர்த் தொகுதி

# கல்விவள நிலைய நூலகம்

## இன்றுமுதல் பூரண செயற்பாடு

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்துக் கல்லூரியில் அமைந்திருக்கும் நல்லூர்த் தொகுதிக் கல்வி வள நிலைய நூலகம் இன்று திங்கட்கிழமை முதல் முழு அளவிற் செயற்படவிருக்கிறது.

இன்று பிற்பகல் மூன்று மணிக்கு நிலையத் தலைவரும் நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரியுமான திரு. சு. சிவநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறவிருக்கும் விழாவில்கல்வி அதிகாரி செல்வி எல். ஆர். நவரத்தினசிங்கம் மாணவர்களுக்கு நூலக அட்டையை வழங்குவதன் மூலம் நூலகச் செயற்பாட்டை ஆரம்பித்து வைப்பார்.

யாழ். இந்துக்கல்லூரி அதிபரும் நிலைய முகாமைக்குழு உறுப்பினருமான திரு. பொ. ச. குமாரசாமி மங்கல விளக்கேற்றுவார்

தொழிலதிபர் திரு. க. கனகராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து நிலைய நூலகத்துக்கு நூல்களை அன்பளிப்பாகவழங்குவார்.

திருமதி நாகம்மா கனகராசாபரிசில்களை வழங்குவார்.

பாரதத் தூதரக அலுவலர் திரு. கே. அசோகன் தூதரகச்சார்பில் திரைப்படச் சுருள்களை வழங்கிப் படக்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

இரு வாரங்களுக்கு முன்னர் பாரதநாட்டுப் பிரதித் தூதுவர் திரு. ஆர். எம். அபியங்கார் நல்லூர் கல்வி வள்நிலையத்துக்குத் திரைப்படங்காட்டும் கருவியொன்றினை அன்பளிப்பாக வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

நல்லூர் வட்டாரப் பாடசாலை மாணவர்களின் கல்வியை அபிவிருத்தி செய்யும் வகையில் இக்கருவியைப் பயன்படுத்த கல்வி வள நிலையத்தினர்திட்டமிட்டுள்ளனர்.

நாளை மறுதினம் புதன் கிழமை பாடசாலை மாணவர்களுக்கான முதற்காட்சி இடம் பெறும். (மா)

# ★ ஜனாதிபதி தேர்தல்களம்

## "அபிவிருத்தி சபை கலைக்கப்பட்டு கிராமாட்சி, நகராட்சி மன்ற முறை மீண்டும் அமுலுக்கு வரும்"

### மன்னார் சு. க. அமைப்பாளர் தகவல்

(மன்னார்)

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் உணவு மானியம் மீண்டும் வழங்கப்படும். இன்றைய அரசு கூப்பன் புத்தகங்களைப் பறித்து ஏழைகளின் வயிற்றிலடித்துள்ளது. மக்களை ஏமாற்றுவதற்காக ஒரு சிறிய தொகையை உணவு முத்திரையாக வழங்கியுள்ளது.

இவ்வாறு மன்னார்–உப்புக்குளத்தில் ஜனுப் ஜப்பார் தலைமையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கருத்தரங்கில் உரையாற்றிய சிறிலங்கா சுதந்திரக்கடசியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் டொக்டர் குரூஸ் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது:

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் உணவு முத்திரை முறை நீக்கப்பட்டு கூப்பன் புத்தகம் மீண்டும் வழங்கப்படும்.

அபிவிருத்திச்சபையெல்லாம் கலைக்கப்பட்டு மீண்டும் கிராமாட்சிமன்றம், நகராட்சி மன்றம் போன்ற முறைகள் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

ஐக்கியதேசியக்கட்சி அமைப்பாளர்களையும், பிரமுகர்களையும் மன்னார் மாவட்டத்தில் நியமித்தும் மன்னார் மாவட்டத்தில் அபிவிருத்தி வேலைகள் எதுவும் செய்யவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் மன்னார் மாவட்டத்தில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சியிலேயே விவசாயிகள் பெரும் லாபமடைந்துள்ளார்கள். [க]

## குமாருக்கு பெரும் வரவேற்பு

கிளிநொச்சி)

"பெருந்திரளான கூட்டணி ஆதரவாளர்களுடன் திரு. குமார் பொன்னம்பலம் இங்கு வந்திருப்பது எனக்கு வியப்பை அளிக்கிறது."

கிளிநொச்சி எம். பி யின் காரியாலயத்திற்கு, ஜனாதிபதி தேர்தல் அபேட்சகர் திரு. குமார் பொன்னலம் ஆதரவாளர்களுடன் நேற்றுமுன் தினம் காலை சென்றபோது அங்கிருந்த கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு கூறினர்.

திரு. ஆனந்தசங்கரியும், திரு. குமார் பொன்னம்பலமும் குசலம் விசாரித்துக் கொண்டபோது, தரவாளர் பலத்த கரகோஷம்செய்தனர். அப்பொழுது அங்கு எம் பி. யின் செயலாளர் திரு.கிருஷ்ணராசாவும் இருந்தார்.

கிளிநொச்சித் தொகுதிக்கு நேற்று முன்தினம் காலை திரு குமார் பொன்னம்பலம் வந்தபோது அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. கிளிநொச்சி கந்தசாமி கோவிலில் அவர் வழிபாட்டை முடித்துக் கொண்டு, அங்கு தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

பழைய பஸ் நிலையத்திலிருந்து, புதிய பஸ் நிலையம், சந்தை வர்த்தக நிலையங்களுக்கு திரு. குமார் பொன்னம்பலம் சென்றபோது கூட்டணி ஆதரவாளர்கள் அவரை வரவேற்றனர். திரு. குமார் பொன்னம்பலம் அவர்களுடன் கிளிநொச்சி எம். பி. யின் காரியாலயத்திற்குச் சென்று திரு. ஆனந்த சங்கரியைச் சந்தித்தார்.

ஆதரவாளர்கள் மத்தியில் திரு. குமார் பொன்னம்பலம் பேசுகையில், கிளிநொச்சித் தொகுதி தனி மாவட்ட மானால்தான் இங்குள்ள பிரசனைகள் தீரும்' என்ருர்.

அவர் மேலும் கூறியதாவது:–

'கிளிநொச்சி தனி மாவட்டமாகவேண்டும் என்ற கோரிக்கையை ஆதரிக்கிறேன். தொகுதி நிர்ணயசபையிலும் இதனை வலியுறுத்தியிருக்கிறேன். ஆசிரியர் பற்ருக்குறை: வேலைவாய்ப்பில் பாபட்சம். பல்கலைக்கழகத் தெரிவில் பின்தங்கிய நிலை, இவைகள் நீங்க கிளிநொச்சி தனி மாவட்டமாக வேண்டியது அவசியமாகும்.

திரு. குமார் பொன்னம்பலம் இங்கிருந்து மட்டக்களப்புக்குப் புறப்பட்டார்.

## படிப்பக நிர்வாகிகள்

[நாவற்குழி]

நாவற்குழி மேற்கு சித்தி விநாயகர் படிப்பகத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

த. பவளகேசன் தலைவர், சி. பாலறஞ்சன் உப–தலைவர், சி. கருணுகரன் தனுதிகாரி, ப. ஸ்ரீஸ்கந்தராசா உப–தனுதிகாரி, ம. மணிவண்ணன் காரியதரிசி, க. ரவீந்தரன உப–காரியதரிசி.

மற்றும் ஆறுபேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

### மனைவியின் மரணம் தொடர்பாக

## நீண்டகாலம் றிமாண்டில் வைக்கப்பட்டவர் விடுதலை

(சாவகச்சேரி)

மனைவிக்கு எரிகாய முண்டாக்கி மரணத்தை விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு நீண்டநாட்களாக விளக்கமறியலில் இருந்த புலோப்பளையைச்சேர்ந்த கார்த்திகேசு அன்னலிங்கம் என்பவர் விடுதலை செய்யப்பட்டார். இவ்வழக்கு பளை சுற்று நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

முறைப்பாட்டுக்காரரர் மன்றுக்குச் சமுகமளிக்கத் தவறியதை எதிரிசார்பில்ஆஜராகிய சட்டத்தரணியான ஆர். ஸ்ரீ சிவாயா நீதிபதியின் கவனத்திற்கே கொண்டுவந்து இனி மேலும் தொடர்ந்து எதிரியை விளக்கமறியலில் வைத்திருப்பதுமனிதாபிமானமற்றசெயல் என்று வாதாடியதை நீதிபதி ஏற்றுக்கொண்டு இதுவரை எதிரி விளக்கமறியலில் இருந்ததற்காகத் தான் மனவருத்தப்படுவதாகக்கூறி எதிரியை விடுதலைசெய்தார். (க)

## லெபனுனில் இலங்கையர் வேலைசெய்யத் தடை

(கொழும்பு)

லெபனுனில் தற்பொழுதுள்ள நிலைமையில் அங்கு இலங்கையர் வேலைக்கு செல்வது தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது

இதுபற்றி தொழில்அமைச்சு சகல தொழில் முகவர் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளது.

லெபனுனில் தற்பொழுது சுமார் 5000 இலங்கையர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்களில் 116 இலங்கையர்கள் வெளிநாட்டமைச்சின் உதவியுடன் அண்மையில் திரும்பியுள்ளனர். (க)

### பணிப்பெண் விவகாரம்:

## அறிக்கை சமர்ப்பிக்க நீதிபதி உத்தரவு!

(மாவிட்டபுரம்)


மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பணிப்பெண் ஒருவர் தமக்கு நேர்ந்த கதி பற்றி விபரித்ததையடுத்து இது பற்றிஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறுநன்னடத்தை பாதுகாவல் அதிகாரிக்கு மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

காங்கேசன்துறையில் வீடு ஒன்றில் வேலைக்கிருந்த நுவரெலியாவைச் சேர்ந்த இராஜலிங்கம் சோதிமலர் என்னும் பெண்மணி தமக்கு ஏற்பட்ட துன்புறுத்தல் சம்பவங்கள் தொடர்பாக காங்கேசன் துறை பொலிசில் முறைப்பாடு செய்ததையடுத்து இவரை மல்லாகம் நீதிமன்றத்தில் பொலிசார் ஆஜர் செய்தனர்.

இப்பணிப்பெண் நீதிமன்றத்திலும் தமக்கு நேர்ந்த கதிபற்றி விளக்கியதும்நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் இவருக்கு ஏற்பட்ட நிலைமைகள் பற்றி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நன்னடத்தை பாதுகாவல் அதிகாரிக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

அதுவரை இப்பணிப்பெண்ணை றிமாண்டில்வைத்து கைதடி இரட்சணியசேனையில் அனுமதிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (க)

## சமாதான நீதவான்



நல்லூர் தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணி உபஅமைப்பாளர் திரு. வேலுப்பிள்ளை அப்பையா, சமாதான நீதவாகை நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாநகாசபைக்கான தமிழர் விடுதலைக்கூட்டணியின் மேலதிகவேட்பாளரான இவர், திருக்குறள் முன்னணிக் கழகப்பொருளாளராகவும், சிறைச்சாலை நல்லொழுக் உத்தியோகத்தவராகவும், வட இலங்கை தெங்குபனம்பொருள் கூட்டுறவுச்சங்கசெயலாளராகவும் பணியாற்றுகின்ருர். யாழ். உயர் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதவாகை இன்று சத்தியப்பிரமாணம் செய்கின்ருர்.




றுமிக்கோ

நாடறிந்த வர்ணக் குடும்பம்
தேடி வருகிறது உங்களை
யாழ்ப்பாணத்தில்

றுமிக்கோ இலச்சினை கொண்ட பொருட்கள்
உங்களுக்குப் புதியன வல்ல

- றுமிக்கோ இமல்சன் பெயிண்ட்
- றுமிக்கோ வார்ணிஷ்
- றுமிக்கோ தின்னர்
- றுமிக்கோ மெத்திலேட்டட் ஸ்பிரிட்
- றுமிக்கோ டர்ப்பன்டைன்

ஆகிய இத்தனையும், நீங்கள் இதுவரை கொழும்பிலும் மற்று மிடங்களிலும் இருந்து தருவித்து உபயோகப் படுத்தி மகிழ்ந்தவையே. இத் தரமிக்க பொருட்களை நீங்கள் உங்கள் கட்டிட, மற்றும் பூச்சு வேலைகளுக்கு இனிமேல் இலகுவாக யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொள்ளலாம்

மனையழகு மிளிர உங்கள் மனைநாடி வருகிறது, தரமிக்க, நாடறிந்த றுமிக்கோ வர்ணக் குடும்பம் சகாய விலைகளில், எல்லாப் பெயிண்ட் விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

RUMECO INDUSTRIES LIMITED
15, MELBOURNE AVENUE, COLOMBO 4.
TEL: 580632 T'GRAMS - "NORWES COLOMBO"

## கலைஞர்களைக் கௌரவிக்க
# அரசு முன்வந்தது பாராட்டுக்குரியது!

(மாவிட்டபுரம்)

"இசைக்கலைக்கும், இறை நம்பிக்கைக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இறைவனுடன் இணைந்த கலையை அவன் அருளுடன் பயின்றால் தான் மேன்மைநிலை அடைய முடியும். இந்தவகையில் இறையருளால் கலையில் மேன்மையுற்ற கலைஞர் பத்மநாதன் அரச விருதும் பாராட்டும் கௌரவமும் பெறுவதும் மிகவும் மகிழ்ச்சிக்குரியது."

இவ்வாறு அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரியம்மன்கோவிலில் அரசவிருது பெற்ற நாகசுரக்கலைஞர். என். கே. பதமநாதனுக்கு நடத்தப்பட்ட பாராட்டுவிழாவில் கலந்துபேசிய சிவத்தமிழ்ச் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி கூறினர்.

ஆசிரியர். செ. கதிரேசர் பிள்ளை தலைமையில் அளவெட்டிவடக்கு பொதுமக்கள் சார்பாக நடத்தப்பட்ட இவ் விழாவில் திரு. பத்மநாதன் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தனால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்

அளவெட்டி இசைக்கலைஞர் சார்பாகவும், வட அளவை சன சமூகநிலையம் சார்பாகவும் பாராட்டுப் பத்திரங்கள் வாசித்து வழங்கப்பட்டன.

இவ் விழாவில் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ்க் கலைஞர் ஒருவருக்கு முதன் முதலாக இக்கௌரவம் அளிக்கப்பட்டது பாராட்டுக்குரியது. கலைஞர்களைப் போற்றிக் கௌரவிப்பது அவர்களுக்கு மேலும் ஆர்வத்தை உண்டுபண்ணக்கூடியது. மன்னர்கள் காலத்திலே போற்றிப் பாதுகாக்கப்பட்ட கலைஞர்கள் பின்னர் இடைக்காலததிலே மழுங்கும் நிலை ஏற்பட்டபோதும் இன்று மீண்டும் புது எழுச்சிபெற்றுள்ளது.

(7-ம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் பாரதி நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம்]

பாரதி நூற்றாண்டு விழா மாங்குளம் மகாவித்தியாலயத்தில், நாளை 28ம் தேதி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. மு. சிவானந்தன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

உதவி அரசாங்க அதிபர் திரு. வி. சிங்காரவேலு சிறப்பு விருந்தினராகக் கலநதுகொள்வார். மகாவித்தியாலய அதிபர் திரு. ஆ. சண்முகரத்தினம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

திருமதி மதிவதனநாயகி பொன்னுத்துரை, மாதகல் வ கந்தசாமி, திரு. ம. க. அ. அந்தனிசில் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். கிராமோதய சபைத்தலைவர் திரு. ஆர். சண்முகலிங்கம், திரு. ஆர். ஸ்ரீஸ்கந்தராசா, வணபிதா. ஜேம்ஸ் பத்திநாதர், திரு.ஜே. எவ். எக்ஸ். ஜெயசீலன் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

திரு. செ. கதிரேசர்பிள்ளை தலைமையில் நடைபெறும் பட்டிமன்றத்தில், சைவப்புலவர் எஸ். செல்லத்துரை, முல்லைமணி வே. சுப்பிரமணியம், நாவேந்தன், திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொள்வார்கள். [க.

## அனுமதிப்பத்திரமின்றி
# மரம் ஏற்றியதாக வழக்கு: எதிரிகளுக்குப்பிணை

(சாவகச்சேரி)

அனுமதிப் பத்திரமின்றி மரங்கள் கொண்டுசென்றதாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில், எதிரிகள் தலா 2000 ரூபா பிணையில் செல்லஅனுமதிக்கப்பட்டனர்.

இவ்வழக்கில் கிளிநொச்சியைச் சேர்ந்த செல்லன் அருந்தவராசா, நடராசா கிருஷ்ணன், பொன்னையா மகேஸ்வரன், கணபதிப்பிள்ளை வல்லிபுரம், பொன்னையா இரத்தின சிகாமணி என்பவர்கள அனுமதிப்பத்திரமில்லாது காட்டு மரங்களை ஏற்றியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

முறைப்பாட்டுக்காரர் சார்பில் வனபாபாலனப் பகுதியை சேர்ந்த எஸ். வேலாயுதபிள்ளை சமுகமாயிருந்தார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். கே. திரவியநாயகம் ஆஜரானுர்.

எதிரிகளைத் தலா 2000 ரூபா பிணையிற்செல்லவும்லொறியை 75,000 ரூபா பிணையில்விடவும் நீதிபதி அனுமதித்தார். (க)

## புதிய சமாதான நீதவான்



யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், பூநகரி மகா வித்தியாலயம் என்பனவற்றில் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற கொழும்புத்துறையைச் சேர்ந்த திரு. இராமலிங்கம் செல்வராசா யாழ். மாவட்டத்திற்குச் சமாதான நீதவானுக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச்சகாய நிதிச் சங்கம், வடமகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம் கொழும்புத்துறை சனசமூக நிலையம், வெள்ளாந்தெரு ஐக்கிய பண்டக சாலைச்சங்கம, என்பவற்றின் தலைவராகவும், யாழ். மாநகர பலநோக்கு கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழு உபதலைவராகவும் வடமாகணக்கூட்டுறவு அச்சகநூற்பதிவுச் சங்கம், யாழ். கல்விவட்டார அதிபர்கள் சங்கம், ஆலோசக ஆசிரிய சங்கம், என்பவற்றின் செயலாளராகவும், யாழ் கல்வித்திணைக்களத்துடன் வழங்குசபை நிதிக்குழு உறுப்பினராகவும், வட இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கம், வட இலங்கை அதிபர்கள் சங்கம், நல்லைஞான சம்பந்தர் ஆதினக் கல்விக்கலை கலாச்சாரக்காப்புக்கழகம் என்பனவற்றின் நிர்வாக உறுப்பினராகவும் கடமையாற்றினுர்

யாழ் நீதிமன்ற நீதிபதி ரி ஜோகநாதன் முன்னிலையில் இவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (க)





# இப் பூரண சலுகை உங்கள் பாடசாலைக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் இலவசமாக வழங்குகிறது.

பாடசாலைகளில் விளையாட்டுத் துறையை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் படி, எந்தப்பாடசாலையாயினும் 750 ரூபாவுக்கோ, அன்றி அதற்கு மேற்பட்ட பெறுமதிக்கோ, தீவடங்கிலும் உள்ள கூ.மொ.வி. விளையாட்டு உபகரண விற்பனை நிலையங்களிலிருந்து விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்ய முடியும். உங்கள் பாடசாலை செய்யவேண்டியது ஆகக் குறைந்தது 3000 பாவித்த பெரெக் பட்டரிகளைச் சேகரிப்பது மட்டுமே.

**அதிக சேகரிப்பு - அதிக பயன் தரும்**

அதிக எண்ணிக்கை பட்டரிகளை சேகரித்தால் உங்கள் பாடசாலை, அதிக பெறுமானமுள்ள விளையாட்டு உபகரணங்களைப் பெறும். [3000 பெரெக் பட்டரிகளை சேகரித்தால் 750 ரூ. பெறுமானமுள்ள விளையாட்டு உபகரணங்கள். 4500 பெரெக் பட்டரிகளைச் சேகரித்தால் 1,125 ரூ. பெறுமானமுள்ள விளையாட்டு உபகரணங்களும் கிடைக்கும் அதேபோல் சேகரிப்புக்கேற்ப பெறுமானமும அதிகரிக்கும்]

உங்கள் பாடசாலை பெறக்கூடிய விளையாட்டு உபகரணங்களின் பெறுமதிக்கு கட்டுப்பாடு கிடையாது.

**விண்ணப்ப விபரம்**

உங்கள் பாடசாலை 3000 பாவித்த பெரெக் பட்டரிகளை சேகரித்ததும் அதிபர் மூலம் பின்வரும் முகவரிக்கு எமக்கு எழுத வேண்டும்.

இலவச விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளும் தகுதி பெற, பாடசாலைகள் பெரெக் பட்டரிகளை சேகரிக்கத் தொடங்கலாம்.

உங்கள் பாடசாலையின் கடிதம் எமக்குத் கிடைத்ததும் அங்கு விஜயம் செய்யும் எமது பிரதிநிதி பட்டரிகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு கிட்டிய கூ.மொ.வி. நிலைய விளையாட்டு உபகரணப் பிரிவில் மாற்றக்கூடிய பணவவுச்சரை வழங்குவார்.

முகவரி—
"உங்கள்-பாடசாலை-விளையாட்டு-உபகரணங்கள்" திட்டம்
347, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2

**விசேஷ போனஸ் சலுகை.**

பின்வரும் தரங்களிலிருந்து, 3000 பாவித்த பெரெக் பட்டரிகளை முதலில் சேகரிக்கும் பாடசாலைக்கு முறையே 3000 ரூ. பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.

தரம் "ஏ"—1000 மாணவர்கள் வரை
தரம் "பி"—1001 முதல் 2500 மாணவர்
தரம் "சீ"—2501 முதல் அதிக மாணவர்

அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கும் இச்சலுகை வழங்கப்படும்.

BEREC

HTL BC 1184

## கொழும்புத்துறை செபமாலை அன்னை திருநாள்

யாழ்ப்பாணம்]

யாழ். கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்தத் திருநாள் திருப்பலியும், திருமணி ஆராதனையும், நற்கருணைப் பவனியும் எதிர்வரும் 2-ம் திகதி சனிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

3-ம் திகதி ஞாயிறு காலை 7 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலிப் பூசையும் தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட தேரில் அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

3-ம் திகதி யாழ்-கொழும்புத்துறை பஸ் கோவில் வரை செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது [அ]


ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30
சனி-ஞாயிறு 2-30
24—30 வரை
நிறம்மாறுத பூக்கள்

ராஜா (யாழ். நகர்)
4 காட்சிகள்
பிரதாப்-ராதிகா
'வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)
1-10-82 முதல்
பாக்கியராஜ்- சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன்கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்-சுபாஷினி
பாலைவனச்சோலை

றீகல் 2-வது ஹவுஸ்புல் வாரம். 10-30,
[யாழ்.நகர்] 2-30, 6-15 9-30
ரஜனிகாந்த்-ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக்காளை
(கலர்)


## இமையாணனில் ப. பொ. பயிற்சி நிலையம்

(புலோலி)

பொலிகண்டி, கரணவாய், இமையாணன் பகுதிமக்களின் கன்மைகருதியும். இப்பகுதிகளில் பனைவள அபிவிருத்தினை மேம்படுத்து முகமாகவும் பனம்பொருள் பயிற்சிநிலையமொன்று இமையாணனில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இமையாணன் விசேட சேவை அலுவலர் திரு. தி. வரதராசன் இப்பனம்பொருள் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்துவைத்தார்.

பொலிகண்டிக் கிராமசேவை அலுவலர் திரு. கி. ஜெகநாதன் போதனாசிரியை செல்வி ஐமுனா உடபட இன்னும் பலர் இவ்வைபவத்தில் உரையாற்றினார்கள். [அ]

## கலைஞர்களை....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இது மிகவும் பாராட்டுக்குரியது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் பேசுகையில் கூறியதாவது:- இந்த அரசு கலைஞர்களை போற்றிக் கௌரவிக்க முன்வந்துள்ளமை பாராட்டுக்குரியது. நமது கலைஞர்களின் திறமைக்கு இவ்வாறான கௌரவங்கள் அவசியமானவை. தமிழகத்திலிருந்து இங்கு தரமான கலைஞர்கள் மரும் ஒருவழிப் பாதையை வாற்றிக இங்கிருந்தும் தரமான கலைஞர்கள் தமிழகம் சென்று கச்சேரி நடத்தக் கூடியஇரு வழிப்பாதையை உருவாக்கிய நமது கலைஞர்களுக்கு இப்படியான பாராட்டுகள் அவசியமானவை. திரு. பத்மநாதனுக்கு வழங்கப்பட்டது போன்ற விருது தொடர்ந்து ஏனைய கலைஞர்களுக்கும் வழங்கப்படவேண்டும

மற்றும் மாவை சேனாதிராசா, சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு உட்பட பலர் பேசினர். (க)


சாந்தி [யாழ்.நகர்]
Daily 5 shows
THE BODY
Strictly for Adults
Color-Brand New Print


## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 11ம் திகதி திங்கட்கிழமை (27—9—82)

மேடம்: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம்பெறும். சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பமும் ஏற்படும்.

இடபம்: பொதுப்பணிகளில் ஈடுபடுவீர்கள், குறிப்பாக அரசியல்வாதிகட்குப் புதிய ஆர்வம் பிறக்கலாம், சிலர் புண்ணியஸ்தல யாத்திரையை மேற்கொள்ளுவதற்கு இடமுண்டு.

மிதுனம்: பணம் பறிபோவதற்கு இடம் ஏற்படலாம், முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும், அதிக சிந்தனைக்கு இடமளிக்கலாகாது வாயுப பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

கடகம்: காதல் விவகாரங்கள் தலைதூக்கும், இனிமையான சம்பவங்கள் இடம்பெறும், பொருள் வரவுக்கும் இடமுண்டு, பெரியோர்களின் ஆதரவும் கிடைக்கும்.

சிங்கம்: நெஞ்சமும் புண்ணாகி நெடுமூச்சும் வெளிக்களம்பும், தொழிலாளர்கள் தொல்லை தோன்றும், இறைவழிபாடு மிகவும் விரும்பத்தக்கது.

கன்னி: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள், அரசியல்வாதிகட்கு நல்ல ஆதாயம் கிடைக்கும், எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள். பெரியோர் ஆசியும் அவசியம் கிடைக்கும்.

துலாம்: தொழில்துறையில் புதிய வெற்றிகள் கடைக்கும், மேலதிகாரிகளின் பாராட்டுக்கும் இலக்காகுவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடல்கடந்த பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம்.

விருச்சிகம்: மெத்தவும் பொருள்சேரும், மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும், தித்திக்கும் செய்தியுடன் தேனை வாழ்வும் உண்டாம்.

தனுசு: எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே உந்தும், ஏமாற்றம் தாக்கும், விந்தையான போக்கும் அதிகம் வேடிக்கை காட்டும்.

மகரம்: ஆத்திரப்போக்கு அருமையான சந்தர்ப்பத்தை இழப்பதற்கு இடமளிக்கும், வேண்டியவர்களைப் பகைத்துக் கொள்வீர்கள், மேலதிகாரிகளுடன் மோதலைத் தவிர்த்துக்கொள்ளவும்.

கும்பம்: கட்டிவெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை காதலர்கள் எண்ணங்கள் கைகூடும், இனபந்துக்களின் ஆதரவு கிடைக்கும், எதிர்பார்த்த வரவிலும் திருப்தி ஏற்படும்.

மீனம்: எதிலும் அவசரக் கோலம் தென்படும். சகோதர வழியால் சஞ்சலத்துக்கும் இடமுண்டு, எதிர்பார்த்த வரவிலும் தடைகள் ஏற்படக்கூடும். மனத்திடம் மருந்தாகும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## மின்சார ஊழியர் தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி சபை உப அலுவலகத்தில் மின்சார ஊழியர்கள் பற்றுக்குறையால் மின்சார வேலைகள் ஸ்தம்பித நிலையில் உள்ளது.

தற்காலிக ஊழியர்களை நியமிக்கும்படி மேலிடத்தில் இருந்து உத்தரவு வந்தும் இவ் உபசபையினர் அதிசிரத்தை கொண்டுள்ளதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது. (க)

## முச்சக்கரவண்டி அன்பளிப்பு

[கிளிநொச்சி]

சமூகசேவைத் திணைக்களத்தால் இராமநாதபுரத்தைச் சேர்ந்த அங்கவீனரான திரு. யோசப் அமலநாதன் என்பவருக்கு முச்சக்கரவண்டி ஒன்று அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைகளில் இப்பகுதி கிராமோதயசபை தலைவர் திரு. சி. தங்கராசா தலைமையில் நடைபெற்ற முச்சக்கரவண்டி வழங்கும் வைபவத்தில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி இவ்வண்டியை கையளித்தார்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சுப்பிரமணியம், விசேடசேவை உத்தியோகஸ்த்தர் திரு ஐ. தங்கராசா, கிளிநொச்சி பிரதேச சபைத் தலைவர் திரு. என். சுப்பிரமணியம், சமூகசேவைத் திணைக்களத்தை சேர்ந்த திரு. பொன் நித்தியானந்தன் உட்பட பலர் உரையாற்றினர். (க)


உத்தரவாதத்துடன்
சென்னை - ரூபவாகினி
ஏரியல் பொருத்திக்கொள்ளவும்
மற்றும்
உங்கள் வீட்டு மங்கள வைபவங்களை
வீடியோவில்
படம் பிடித்துக்கொள்ளவும்
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்
யாழ்ப்பாணம்.

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வர்சல் இதயம்

லிடோ தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
சிவாஜி-கே. ஆர். விஜயா
கிரகப்பிரவேசம்

ராணி (யாழ் நகர்) தினசரி 10-30, 2-00, 6-00, 9-30.
ஜெமினி – சரோஜாதேவி – நாகேஷ்
பணமா பாசமா

மனோகரா (யாழ்ப்பாணம்) 10-30, 2-15, 4-45, 7-15, 9-30
WANG YU in
BLOOD OF THE DRAGON
(Scope—Color—Karate Film)

ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை
எமது அடுத்த வெளியீடு
நம் நாடு

மற்றுமொரு
பொன்னான
சந்தர்ப்பம்






GS
கோல்ட் ஸ்டார்
20" வர்ணத் தொலைக் காட்சி
சிறப்பு அம்சங்கள்:
- துரித இயக்கப் படக் குழாய்... நான்கு விநாடிகளில் படமும் ஒலியும் கிடைக்கின்றன. சூடேற வேண்டிய அவசியமில்லை.
- தன்னியக்க வர்ணக் கட்டுப்பாட்டு அமைப்பின் மூலம் வேறுபடும் வர்ணப் படங்களின் செறிவு தானாகவே தரப்படுத்தப்படுகின்றது.
- காந்தவியல் தலையீட்டினால் வர்ணப் படத்தில் கறைகளைத் தன்னியக்க "டிகோஸர்" சாதனம் போக்குகின்றது.
- 1 வருடகால உத்தரவாதமும் விற்பனைக்குப் பின் பராமரிப்புச் சேவையும்.
- அடக்கமான அளவு-50 செ.மி; எங்கும் வைக்கக்கூடியது.
கோல்ட் ஸ்டார்
வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வாங்குங்கள்–நிகரற்ற செயற்திறன், நிகரற்ற விலை.
ஏகமுகவர்கள்:
பான் ஏசியா லிமிட்டெட்
விற்பனை நிலையங்கள்:
கொழும்பு-172, கெய்சர் வீதி, கொழும்பு 11. தொலைபேசி: 26598, 22376
காட்சியறை; 666, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 589794
திருகோணமலை- 57, தபால் நிலைய வீதி, திருகோணமலை.
யாழ்ப்பாணம்- 95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7697
நாட்டிலுள்ள ஏனைய பிரபல வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

# "நவீன ரயில்சேவை யாழ்ப்பாணத்துக்கும் வேண்டும்!"

## வவனியா பாதுகாப்பு மாநாட்டில் யாழ். எம்.பி. யோகேஸ்

(யாழ்ப்பாணம்)

''ரயில்களின் உள்ளேயும், ரயில்நிலையங்களிலும் இளநீர், சோடா போன்றவற்றை விற்பனை செய்வதை தடைசெய்ய வேண்டும்''.

இவ்வாறு யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு-யாழ். மெயில ரயிலில் இடம்பெற்ற கொள்ளை சம்பந்தமாக வவனியா ரயில் நிலயத்தில் நடைபெற்ற பாதுகாப்புத் தொடர்பான மகாநாட்டில் கேட்டுக்கொண்டார்.

யாழ்,எம்.பி. திரு.யோகேஸ்வரன் இம்மகாநாட்டில் சமர்ப்பித்த மற்றும் கோரிக்கைகளாவன;

''கண்டி–கொழும்பு – காலி ஆகிய இடங்களுக்கூடாக நடைபெறும் 'நவீன இன்ரசிற்றி' ரயில் சேவை போல் யாழ்ப்பாணத்துக்கும் – கொழும்புக்கும் இடையே நடாத்தவேண்டும், இச்சேவையின் மூலம் கொழும்பிலிருந்து 5 மணித்தியாலங்களில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிடலாம்.

''புகையிரதங்களில் பாதுகாப்பு அளிக்கக் கூடியதான சகல வசதிகளும் கொண்ட புதிய பெட்டிகள் இணைக்கப்படவேண்டும். அதாவது மின்சார வெளிச்சம், பாதுகாப்பான ஜன்னல்கள், கதவுகளை இப்பெட்டிகள் கொண்டிருக்க வேண்டும்.

''பொல்காவலை, குருநாகலை மாகோ, கல்கமுவ, அனுராதபுரம் ஆகிய ரயில்தரிப்பு நிலையங்களில் இளநீர், வடை. சோடாபானம், நிலக்கடலை போன்றவை விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்படுவதுடன், ரயில்களிலும் இப்பொருட்கள் விற்பவர்களை நடமாடவிடக்கூடாது.

''ரயில்களில் பாதுகாப்பு அதிகாரிகளின் தொகையை அதிகரிப்பதுடன் இவர்களுக்கு பொலிசாரும் உதவியாக இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்''.

இக்கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட அதிகாரிகள் குழுவினர், உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக யாழ்.எம்.பிக்கு உறுதியளித்தனர்.

ரயில் கொள்ளை – தாக்குதல் சம்பவங்களையிட்டு கவலை தெரிவித்த இந்த அதிகாரிகள்; அண்மையில் வியாங்கொடை ரயில் நிலயத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்கும், இதற்கும் தொடர்புகள் இருந்திருக்கலாமென்றும் அச்சம் தெரிவித்திருந்தனர்.

மேற்படிகொள்ளைச்சம்பவத்தின் போது கொள்ளைஅடிக்கப்பட்ட பொருட்கள் வவனியா பொலிஸ் நிலயத்தில் வைக்கப்பட்டிருப்பதாகவும், உரியவர்கள் அடையாளம் காட்டி இப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாமென்றும் யாழ். எம். பி. தெரிவித்தார். (மா)

# மல்லாகத்தில் கடை உடைத்துத் திருட்டு

[யாழ்ப்பாணம்]

பலசரக்குக் கடையொன்று உடைக்கப்பட்டு, கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது. மல்லாகத்தில்இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

மல்லாகத்திலுள்ள நவரத்தினம் பத்மநாதனுக்கு சொந்தமான கடையிலேநேற்றுமுன் தினமிரவு இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடையொன்றின் முன் கதவை உடைத்துச் சென்ற திருடர்கள், கடைக்குள்ளிருந்த மேசை லாச்சியிலிருந்த 1500 ரூபா ரொக்கத்தையும், 840 ரூபா பெறுமதியான பால் மா வகைகளையும் களவாடிச் சென்றுள்ளதாக சுன்னாகம் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் நிலயத்தைச்சேர்ந்த சார்ஜன்ட் எஸ். சிவலிங்கம், கான்ஸ்டபிள்கள் இ. கந்தசாமி, கே. ரட்ணராஜா ஆகியோர் விசாரணை செய்துவருகின்றனர். [மா]

# ஜனதிபதி தேர்தல் அடையாள அட்டை

(கொழும்பு)

ஜனதிபதி தேர்தலுக்கான அடையாள அட்டைகள்பொது மக்களுக்கு இன்னும் சில தினங்களில் தபால் மூலம் கிடைக்குமென்று தேர்தல் ஆணையாளர் திரு சந்தானந்த டீ சில்வா தெரிவித்தார்.

இவ் தேர்தல் நடவடிக்கைகள் குறித்து 22 தேர்தல் மாவட்ட பொறுப்பதிகாரிகளுக்கும் விளக்கமளித்தார்.

மாவட்டங்களில் இடம்பெறவுள்ள வாக்குச்சாவடிகள், கச்சேரிகளில் வாக்குகளை எண்ணும் நிலயங்கள் ஆகியன தொடர்பாகவும் இவ்வதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. வெ

## கிரிக்கட்:

# இந்தியா வெற்றி

புதுடில்லி. செப். 26

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியக்கோஷ்டி வெற்றி பெற்றுள்ளது.

இலங்கைக் கோஷ்டி இப் போட்டியில் 50 ஓவர்களில் 8 விக்கட்டுகளை இழந்த 233 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் ரேய் டயஸ் 121 ஓட்டங்களை எடுத்தார்.

இந்தியக்கோஷ்டி 39 . 2 ஓவர்களில் 4 விக்கட்டுகளை இழந்து 234 ஓட்டங்களைஎடுத்தது. (வெ)

## இன்றும் நாளையும் சிட்டிபாபு சிறப்புரை

[யாழ்ப்பாணம்]

அண்ணாமலைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். வி. சிட்டிபாபு, இன்று திங்கட்கிழமையும், நாளை செவ்வாய்க்கிழமையும் சேர். பொன் இராமநாதன் நினைவுச் சொற்பொழிவுகள் நிகழ்த்தவுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இச் சொற்பொழிவுகளில் முதல்நாள் 'பண்பாடுகள் பற்றிய ஆய்வுகளில் புதிய போக்கு' என்னும் பொருள்பற்றி ஆங்கிலத்திலும், இரண்டாம் நாள் 'மனித பண்பியல் பற்றிய சிந்தனைகள்' என்னும் பொருளில் தமிழிலும் பேராசிரியர் சிட்டிபாபு உரைநிகழ்த்துவார். [மா]

# நாட்டியாலய கலைநிகழ்ச்சி

(கொக்குவில்)

கொக்குவில் கலைக்கோவில் அமரகலாநாட்டியாலய ஏழாவது ஆண்டுக்கலைநிகழ்ச்சி நாளை மறுதினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. எஸ். தியாகராஜா தலைமையில் நடைபெறும் இக்கலை நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உபதலைவர் திரு. சி. நாகராஜாவும் பாரியாரும் கலந்து கொள்வர்.

நடன நிகழ்ச்சிகளுடன், ''திருவிளையாடல்'' நாட்டிய நாடகமும் இடம்பெறும்.

# ரயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## அறிக்கை கையளிப்பு

நிலைமை இவ்வாறிருக்க கொழும்பு – யாழ் ரயில் கொள்ளை தாக்குதல் சம்பந்தமாக விசாரணை நடாத்திய போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் திருமதி வயலற் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினர், பூர்வாங்க அறிக்கை ஒன்றை தயாரித்து சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் திரு.ஆர். சுந்தரலிங்கத்திடம் கையளித்துள்ளன. பிரதி பொலிஸ்மா அதிபர் திரு சுந்தரலிங்கம், நாளை மறுதினமான புதன் கிழமை போக்குவரத்துஅமைச்சரிடம் இந்த விசாரணை அறிக்கையை கையளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அறிக்கையில் புகையிரதங்களில் உள்ள குறைபாடுகள் பற்றியும், அவை எப்படி நிவர்த்திசெய்யப்படவேண்டும் என்றும், சம்பவ தினம் கொள்ளை–தாக்குதல் சம்பவங்கள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

கொள்ளையர்கள் முதலில், இரண்டாம் வகுப்பு உறங்கலிருக்கை ரயில் பெட்டியில் தான் கொள்ளையிடத் திட்டமிட்டிருந்தனர் என்றும், குறிப்பிட்ட பெட்டியைத் திறக்க முடியாதநிலையில்அவர்கள்மூன்றும் வகுப்பில் கொள்ளையடித்தனர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# சுவீப் முடிவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 17 C 0988 | 19 C 0270 |
| 15 D 0767 | 22 D 0490 |
| 26 D 0294 | |
| 06 E 0990 | 17 E 0546 |
| 17 E 0904 | 18 E 0282 |
| 18 E 0641 | 19 E 0087 |
| 09 F 0407 | 09 F 0668 |
| 15 F 0561 | |
| 10 G 0524 | 13 G 0507 |
| 21 G 0135 | |
| 06 H 0157 | 09 H 0757 |
| 17 H 0615 | 26 H 0517 |
| 25 H 0881 | |
| 01 J 0235 | 10 J 0907 |
| 12 J 0699 | |
| 06 K 0953 | 10 K 0966 |
| 13 K 0218 | 16 K 0521 |
| 21 K 0840 | 25 K 0573 |
| 06 M 0536 | 13 M 0568 |
| 08 O 0513 | |
| 01 P 0837 | 05 P 0601 |
| 05 P 0973 | 06 P, 0312 |
| 09 P 0280 | 25 P 0045 |
| 26 P 0786 | |
| 15 Q 0385 | 25 Q 0515 |
| 23 Q 0686 | 24 Q 0825 |
| 02 R 0195 | 09 R 0918 |
| 11 R 0241 | 21 R 0474 |
| 02 S 0654 | 02 S 0760 |
| 04 S 0911 | 06 S 0706 |
| 07 S 0059 | 09 S 0181 |
| 15 S 0678 | 23 S 0551 |
| 01 T 0799 | |
| 08 T 0298 | 11 T 0948 |
| 12 T 0580 | 16 T 0097 |
| 19 T 0270 | 20 T 0884 |
| 22 T 0403 | 23 T 0768 |
| 07 U 0417 | 15 U 0635 |
| 20 U 0017 | 22 U 0693 |
| 26 U 0[illegible]54 | |
| 01 V 0386 | 08 V 0431 |
| 13 V 0747 | 14 V 0963 |
| 15 V 0788 | 18 V 0893 |
| 02 W 0472 | 02 W 0785 |
| 02 W 0850 | 12 W 0044 |
| 15 W 0553 | 23 W 0857 |
| 07 X 0831 | 15 X 0279 |
| 07 Y 0386 | |
| 06 Z 0489 | 06 Z 0783 |

[இவை யாவும் உறுதிப் படுத்தப்படவேண்டும்.]

[இ]

# கோயில் கிணற்றுக்கு இரு சிறுவர்கள் பலி!

(புலோலி)

பெருமாள் தனபாலன் (வயது 11], நமசிவாயம் மாதவன் [வயது 9] ஆகிய இரு சிறுவர்களும் கொட்டடி சித்தி விநாயகர் ஆலய தீர்த்தக் கிணற்றில் குளித்துக்கொண்டிருந்தபோது நீருள் மூழ்கி மரணமானுர்கள்!

இச்சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

''நமசிவாயம் மாதவன் வீட்டிற்கு தனபாலன் வழக்கமாக பால் கொடுத்து வருபவராம் நேற்றுக்காலையும் இவர் மாதவன் வீட்டிற்குச் சென்று பால்கொடுத்துவிட்டு, மாதவனுடனும் மற்றும் சிறுவர்களுடனும் சேர்ந்த வீட்டிற்கு வெளியே நின்று விளையாடினர் அதன் பின்னர் தனபாலனும், மாதவனும் ஆலய தீர்த்தக்கிணற்றில் குளித்தார்கள். இதனை மற்றைய சிறுவர்கள் வெளியில் நின்று பார்த்துக்கொண்டிருந்தனர். தனபாலனும், மாதவனும் நீருள் மூழ்கவே அவர்களைக் காணவில்லையென்று மற்றைய சிறுவர்கள் மாதவன் வீட்டிற்குச் சென்று தெரிவித்தனர். உடனே மாதவன் வீட்டுக்காரரும், பக்கத்திலுள்ள கராஜ் உரிமையாளரும் ஆலய தீர்த்தக்கிணற்றை வந்து பார்த்தபோது இருசிறுவர்களையும் காணவில்லை

''கராஜ் உரிமையாளர் கிணற்றுக்குள் குதித்து சுழிஓடி இரு சிறுவர்களையும் வெளியே எடுத்தபோது அவர்கள் இறந்து கிடந்தனர்.''

மரணவிசாரணை நடத்திய படுத்தித்துறை பதில் நீதிபதி திரு. கே.கே. பாலசுப்பிரமணியம் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். காங்கேசன்துறை பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர். [வெ]

# கல்விவள நிலய நூற்கொடைவாரம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்த்தொகுதிக் கல்விவள நிலயத்துக்கு நூல்களைச் சேகரிப்பதற்காக நல்லூர்த் தொகுதிப் பாடசாலைகளில் நூற்கொடை வாரம் இன்று திங்கள் முதல் ஒருவாரம்நடைபெறவுள்ளது.

அண்மையில் நடைபெற்ற நல்லூர்க்கல்வி வட்டார அதிபர்கள் சங்கக் கூட்டத்தில் நூலகவாரம் நடத்தும் முடிவு மேற்கொள்ளப்பட்டது நூலக வாரத்தைச் சிறப்புற ஏறபாடு செய்து நூலக அபிவிருத்திக்கு உதவுமாறு நல்லூர்வட்டாரக் கல்வி அலுவலர் திரு. சு. சிவநாயகமூர்த்தி வட்டாரப்பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்கள் நூற்கொடை கோரி வரும்போது பூரண ஆதரவு நல்குமாறு நல்லூர்த் தொகுதிப் பொதுமக்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் கல்விவளநிலயம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த ஆண்டு இத்தகைய நூற்கொடை வாரத்தை நிலயம் நடத்தியபோது யாழ்.இந்துக்கல்லூரி மாணவர்கள் ஐந்நூறு நூல்கள் வரை சேர்த்துக் கொடுத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (மா)

# ''மத்திய சந்தை வேண்டும்''

(பண்டத்தரிப்பு)

பனிப்புலத்திற்கு சகல வசதிகளும் கொண்ட மத்திய சந்தையொன்றை நிறுவித் தருமாறு பனிப்புலம் அம்பாதி கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத்தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.


# ஹோம் பிறன்ஸ் லிமிட்
(யாழ்ப்பாணம்)

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறன்ஸ் லிமிட், 82, கன்னதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஹோம் பிறன்ஸ் லிமிட்
82, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்
ஹோம் பிறன்ஸ் லிமிட்
463, காலி வீதி, கொழும்பு-3


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.